**<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>**
**<u>EA.No. 4 / 2022</u>**
**<u>in</u>**
**<u>EP.No.12/2022</u>**

ம.சா.1. சுப்பிரமணி 03.09.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

நிறைவேற்று மனு 12/2022 எனது தகப்பனார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் சொத்தை மைத்துனருக்கு எழுதிக் கொடுத்துவிட்டார். அதனால் நான் தாக்கல் செய்துள்ளேன். நிறைவேற்று மனுவில் கண்ட சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறுதிநிலை தீர்ப்பாணையின் பேரில் நீதிமன்ற ஆணையர் பாக சொத்துக்காளை பார்வையிட்டு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ள விபரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இந்த நிறைவேற்று மனுவில் கண்ட சொத்தையும் சேர்த்து எனது தாயார் குருவம்மாள் பாக வழக்கு தாக்கல் செய்து முதல் நிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். குருவம்மாள் தாக்கல் செய்துள்ள வழக்கில் 5 பேருக்கு பாகம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவில் கண்ட சொத்து விபரம் தவறு என்றால் சரியல்ல. அந்த சொத்து விபரம் தவறு என்று நீதிமன்ற ஆணையர் சொத்துக்களை பார்வையிட்டு அவரது அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. இறுதிநிலை தீர்ப்பாணையில் ஏ பாகம் எனது அப்பாவிற்கும் பி பாகம் எனக்கும் என்று இறுதிநிலை தீர்ப்பாணையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு மாறாக நிறைவேற்று மனுவில் இரண்டு அயிட்ட சொத்துக்களையும் எனக்கு ஒப்படைக்க வேண்டும் என்று நான் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நிறைவேற்று மனுவில் கண்ட சொத்து விபரம் தவறு என்றும் முழுச் சொத்தையும் கேட்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அப்படி இருக்கும்பட்சத்தில் நீதிமன்றம் ஒப்படைப்பு சொத்துக்களை ஒப்படைப்பு செய்ய முடியாத நிலையில் இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற நடவடிக்கை நிலுவையில் இருக்கும் பொழுது லெட்சுமிபதி என்பவருக்கு நான் 1 ஏக்கர் கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அது தடத்திற்காக கொடுத்தேன். லெட்சுமிபதிக்கு நிறைவேற்று மனுவில் கண்ட சொத்துக்களை கிரையம் கொடுப்பதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெற்ற கிரயம் செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. கடந்த 10 நாட்களுக்கு முன்பு எனது தாய் தந்தை குடியிருக்கும் சொத்தில் பியூஸ் கம்பிகளை பிடிங்கு எடுத்துச் சென்றதாக நிறைவேற்று மனு எதிர்மனுதாரர் எனக்கு எதிராக ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்மந்தமாக விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒப்படைப்பு சொத்தில் உள்ள கிணற்றில்

மின்மோட்டாருக்குண்டான வயர்களை அதை பயன்படுத்த முடியாத வகையில் துண்டித்து இடையூறு ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.962/2022ல் பிறப்பிக்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.4.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.09.04 10:33:32 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்